நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப.

ந.க.எண்.4367/19/நஊ2 நாள்:24.9.19.

பொருள்: நகர் ஊரமைப்பு – அதிகாரப் பகிர்வு – உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க கூடுதல் அதிகாரம் வழங்குதல் – சம்பந்தமாக.

பார்வை: 1) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 9862/10/பிஎ1, நாள்: 25.5.2010, 14.6.2010, 30.12.2010 மற்றும் 17.2.2011.
2) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்எ.1) துறை, நாள்: 04.02.2019 –ல் வெளியிடப்பட்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 தமிழ்நாடு அரசிதழ் அசாதாரணம் – பகுதி 3 பிரிவு 1எ, நாள்: 4.2.2019–ல் வெளியிடப்பட்டது.

-----

ஆணை:

பார்வை 1–ல் காண் இவ்வலுவலக சுற்றறிக்கையில் இத்துறையின் உள்ளூர் திட்டக் குழுமங்கள், புதுநகர் வளர்ச்சி குழுமங்கள் மற்றும் மண்டல அலுவலகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளுக்கும் நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 49–ன் கீழ் மற்றும் 47எ–ன் கீழ் முறையே திட்ட அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்க சில அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் சுட்டிய ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 வெளியிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருவதைத் தொடர்ந்தும், உள்ளாட்சிகளுக்கு கூடுதல் அதிகாரப் பகிர்வு வழங்க பல கோரிக்கைகள் வரப்பெற்றதைத் தொடர்ந்தும் உள்ளாட்சிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளஅதிகாரப் பகிர்வில் பகுதி மாற்றம் செய்து குடியிருப்பு கட்டிட உத்தேசங்களைப் பொறுத்தமட்டில் உள்ளாட்சிகளுக்கு கூடுதலாக அதிகாரப் பகிர்வு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு | ஏற்கனவே உள்ள அதிகாரப் பகிர்வு | தற்போது வழங்கப்படும் மாற்றிய அதிகாரப் பகிர்வு |
|---|---|---|---|
| 1. | குடியிருப்பு | 4000 சதுர அடி தரை பரப்பு வரை, 4 குடியிருப்புகள் வரை கொண்ட தரைதளம் மற்றும் முதல் தளம் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் இரண்டு தளங்கள் | 7000 சதுர அடி தரை பரப்பு வரை, 8 குடியிருப்புகள் வரை கொண்ட 12மீ உயரத்திற்கு மிகாத தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் மூன்று தளங்கள் |

குறிப்பு:

* வணிக உபயோக கட்டிடங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்ந்தளிப்பே தொடரும். மேலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வு ஆணையில் தெரிவிக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் அவ்வாறே தொடரும்.

Scanned by CamScanner

மண்டல துணை இயக்குநர் தங்கள் கீழ் உள்ள அனைத்து உள்ளாட்சிகளையும் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை வருடம் ஒருமுறை நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வு மாவட்ட ஆட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் (மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலர், மாவட்ட பேரூராட்சி அலுவலர்), ஆகியோரால் கண்காணிக்கப்படல் வேண்டும். மேலும் மேற்படி அதிகாரப் பகிர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நாளிதழ்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பிரசுரம் செய்திடல் வேண்டும்.

மேற்படி சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்/-)....
நகர் ஊரமைப்பு இயக்குநர்

பெறுநர்

1) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
2) அனைத்து உறுப்பினர் செயலர்கள், கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள்/ புது நகர் வளர்ச்சிக் குழுமங்கள்
3) அனைத்து மண்டல துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள்
4) அனைத்து மாநகராட்சி (சென்னை நீங்கலாக), நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள்

நகல்:

1) அரசு முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
2) இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
3) இயக்குநர், பேரூராட்சிகள், சென்னை–108
4) இயக்குநர், ஊராட்சிகள், சென்னை–18.
5) நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர்/ நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

24/9/19
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்

Scanned by CamScanner